www.padippakam.com



சாதியை வைத்துக்கொண்டு தீண்டாமை ஒழிய வேண்டும் என்பதும் இந்து மதத்தை வைத்துக்கொண்டு தீண்டாமை போக வேண்டும் என்பதும் மாபெரும் முட்டாள்தனமே தவிர சிறிதும் அறிவுடமையாகாது என்பது எனது கருத்து.

-பெரியார்-

VADU இதழ் -07 டிசம்பர் - 2007

தொடர்புகட்கு:-
F.D.S.D.S
MR.THEVATHASAN
4,PLACE ROGER SALENGRO
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

நன்கொடை-1€
சந்தா வருடம்-15€
(தபாற்செலவு உட்பட)

இலங்கை, இந்திய வாசகர்களுக்கு இலவசம்.

வடிவமைப்பு – விஜி

இன்னுமொரு வடு ஊடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. தலித் சமூகத்தினுடைய முன்னேற்றம் கருதிய எமது வேலைத்திட்டங்கள் பல முனைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையானது தமிழ் சமூகத்தின் ஒருபகுதியினரிடையே பெரும் கவனம் பெற்றுவருகின்றது. மறுபுறம் எம்மீதான நையாண்டிகளும், நயவஞ்சக சதிமுயற்சிகளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் நாம் முன்னெடுத்து வரும் பணியானது எமது தலித் மக்களிடையே ஒரு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டை செவ்வனே செய்துவருகின்றது என நாம் கருதுகின்றோம். ஆனாலும் அதிகாரம் மிகுந்தவர்களாயும் ஆதிக்கம் கொண்டவர்களாகவும் எமது வேலைத்திட்டங்களை முடக்கிவிட முனையும் சக்திகள் காணப்படுவதால் எமது முயற்சிகளை இன்னுமின்னும் வேகமாகவும் விவேகமாகவும் கொண்டியங்க வேண்டிய தேவை எம்முன் எழுந்து நிற்கின்றது. ஆகவே சுயமாகவும் சுதந்திரமாகவும் இயங்கிவரும் எமக்கு உங்களது தொடர்ச்சியான ஆதரவுகளே அவசியமானதொன்றாகும். அந்தவகையில் முக்கியமாக எமக்கான சந்தாக்கள் இன்னும் போதியளவு எம்மை வந்தடையாமையே காணப்படுகின்றது. ஆகவே இதுவரை சந்தாக்கள் செலுத்தாதவர்கள் அவற்றை தாமதமின்றி அனுப்பி உதவுமாறு கேட்டுகொள்கின்றோம். மற்றும் உங்கள் நண்பர்கள் வட்டங்களை நோக்கி வடுவை அறிமுகப்படுத்தி உதவுங்கள் என கேட்டுக் கொள்கின்றோம்.

மற்றும் எமது முதலாவது தலித்மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தமையின் வெளிப்பாடாக இன்னும் பல நாடுகளில் இது போன்ற விழிப்புணர்ச்சி மாநாடுகளை நடாத்துவதற்கு தலித்திய உணர்வாளர்கள் ஆர்வம்காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாகவே எதிர்வரும் பெப்ரவரி மாதம் லண்டன் மாநகரில் எமது முன்னணி சார்பில் இரண்டாவது தலித் மாநாடு நடத்துவதற்கான முன்னேற்றபாடுகளும் நடைபெற்று வருகின்றது என்பதை எமது வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். பலவழிகளிலும் உங்களது தொடர்சியான ஆதரவே எம்மை வழிநடத்தும். மேலும் இதுவரை வெளிவந்த "வடு" பத்திரிகை பற்றிய உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

ஆ-ர்

இது மாதமொருமுறை வெளியாகும் ஏடு

படிப்பகம்

www.padippakam.com

# நண்பர்களோடு நாலுவார்த்தை

தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினர் தலித் மக்களினது அரசியல் சமூக மேம்பாட்டுக்கென ஏற்படுத்தப்பட்ட அமைப்பு தனது முதலாவது மாநாட்டை பிரான்சில் கடந்த ஒக்டோபர் மாதம் 20, 21 திகதிகளில் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடாத்தி முடித்திருக்கிறது. கடந்த முப்பது வருடங்களுக்கு மேல் கண்டு கொள்ளாமல் கவனிப்பாரற்று உறங்கிக் கிடந்தவர்கள் மாநாட்டுச் செய்தியைக் கேட்டவுடன் தங்களது சுய முகமூடிகளைக் களையத் தொடங்கினர். குழப்ப வேண்டும் என்றும் தீய எண்ணத்துடன் நாம் சிறிலங்கா அரசிடமும் மற்றும் அரசியல் சக்திகளிடம் பணம் பெற்று மாநாடு நடாத்துவதாக கட்டுக்கதைகளையும் கற்பனைகளையும் தங்கள் எண்ணம் போல் அவிழ்த்து விட்டனர்.

நடந்த மாநாட்டில் நாம் மிகவும் விளக்கமாக எமது நோக்கத்தை தெளிவு படுத்தியிருந்தோம். அதாவது எமது நோக்கமானது ஆண்டாண்டு காலமாக சாதியரீதியாக பாகுபடுத்தப்பட்டும், இழிவு படுத்தப்பட்டும் ஒடுக்கப்பட்டு வருகின்ற அந்த மக்களுக்கான சமூக மேம்பாட்டுக்கான உந்துதலை கொடுக்கும் முகமாகவும் சாதியம் பேசப்படாமல் மறைத்து வைத்திருப்பதன் மூலம் மறைந்து விடும் என்கின்ற பொய்யை உடைத்து சாதியம் பற்றி தமிழ்ச் சமூகம் பேச வேண்டும். அதன் ஆணி வேர் எங்கு உள்ளது என்பதை கண்டறிந்து அது களையப்படுவதற்கு எம்மால் ஆன பங்களிப்பை செய்ய வேண்டும் எனவும் கூறியிருந்தோம். இவ்வமைப்பானது தமிழ் மக்களின் விடுதலைக்கென போராடும் எந்த அரசியல் இயக்கங்களுக்கும் சார்பு அற்றது எனவும் பல தடவைகள் வலியுறுத்தியிருந்தோம்.

இருந்தபோதும் சில இணையத்தளங்களும், சில பத்திரிகைகளும் தொடர்ந்தும் அவதூறுப் பிரச்சாரங்களை பரப்பி எம்மை துரோகிகளாக்க முற்படும் நயவஞ்சகப் போக்கானது யாழ் மேலாதிக்க சாதியினர் தமது வர்க்க, சாதி திமிரை தக்கவைக்கும் கபட நோக்கத்தைத் தவிர வேறென்றும் இல்லை.

சாதி அழிப்பு என்பது வெறும் அரசியல் மாற்றத்தால் மட்டும் ஏற்படுத்தக் கூடியது அல்ல கலாசார மாற்றமும் மிக முக்கியமானது என்பது எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. இக்கலாசார மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எந்த அரசியல் இயக்கமும் முன்வந்து தன்னை அழித்துக்கொள்ள நினைக்காது. எனவே கலாசார மாற்றத்துடன் கூடிய சமூகமாற்றத்தை ஏற்படுத்த ஒரு சமூகவிடுதலை இயக்கத்தினால் மட்டுமே முடியும்.

எம் மக்கள் மத்தியில் புதைந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளை களைந்தெறிய பகுத்தறிவின் ஊடாக சமூக வளர்ச்சியினை மேற்கொண்ட தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு கொள்கைகளை பரப்பி சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதையே நோக்கமாக இருந்து வருகிறது. இதனை புரிந்துகொண்ட ஆதிக்க சாதியினர் தங்கள் நலன்களை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியே எம்மீது பூசப்படும் சேறாகும்.

கடந்த முப்பது வருடங்களாக ஆதிக்க சாதியினரால் முன்னெடுக்கப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டத்தில் தலித்துக்களும் இவர்களோடு இணைந்து பல தரப்பிலும் பங்கு கொண்டுள்ளனர். ஆனால் போராட்டத்தை ஆரம்பித்த ஆதிக்க சாதியினர் பணம் படைத்த நாடுகளில் ஓடி ஒழிந்துவிட போராட்ட துயரத்தில் மாட்டிக்கொண்டவர்களில் அதிகமானவர்கள் தலித்துக்களாகவே உள்ளனர். முப்பது வருடங்கள் கழித்து துன்பப்படும் மக்கள் நலன் சார்ந்து நாம் வாய் திறக்க முற்படும் போது ஆதிக்க சாதியினர் தாங்கள் செய்த செய்து வருகின்ற துரோகங்களை மறைப்பதற்கு அன்றைய ஜீ.ஜீ.பொன்னம்பலம், இராமநாதன் போன்றோர் தலித் மக்களின் விடுதலை எழிற்சியை கொச்சைப்படுத்தி நசுக்க முயன்றனரோ அதே பாணியில் தமிழர்களின் விடுதலைக்கு எதிரானவர்களாக காட்டி எமது முன்னெடுப்புக்களை முடக்க முயற்சிக்கின்றனர்.

ஒரு புறம் சிங்கள இனவாதம் மறுபுறம் தமிழ் இனவாதம் இந்த இரண்டிற்கும் நடுவிலே மாட்டி முழிக்கின்ற பரிதாப மனிதர்களாக தலித்துக்கள். வாழ்கையில் இவர்கள் நலன் சார்ந்து நாம் குரல் கொடுக்காமல் முகத்தை மூடி மறைத்து வைப்பதால் அச் சமூகத்தின் துயரம் தீர்ந்துவிடப் போவதில்லை. எனவேதான் தமிழர்களுக்கென ஒரு தீர்வுத்திட்டம் முன் வைத்தால் இம்மக்களின் மேம்பாட்டுக்கு விசேட சட்டங்கள் சலுகைகள் உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம். இக் கொடுமைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கும் இந்துத்துவத்தை கேள்விக்கு உள்ளாக்குகிறோம். இம் முயற்சிக்கு தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினர் மட்டுமல்லாமல் முற்போக்கு நற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் கரம் கோர்த்து செயற்பட வேண்டுமென்பதே எமது அவசியமான கடமையாக இருக்கிறது. ○



படிப்பகம்

www.padippakam.com

# அழுக்கு

அம்மாவாணச் சொல்றன்
உண்மையத்தான் சொல்றன்
என்னுள் ஆரோ ஏற்றிய அழுக்கு
இன்னும் இருக்குது எனக்கு

பேசப்பிடித்தது தமிழ் தேசியம்
வாழப்பிடித்தது வெள்ளத் தேசம்
யாரோ ஏற்றிய அழுக்கு
இன்னும் இருக்குது எனக்கு

பெயர் சேர்க்க பேசறது தமிழ்
ஊர் சேர்க்கப் பேசறது சாதி
பொருள் சேர்க்கப் பேசறது......
யாரோ ஏற்றிய அழுக்கு
இன்னும் இருக்குது எனக்கு

என்னையும் கழுவிப் பார்த்தேன்
என் உடல் காட்டும்
கண்ணாடியையும் கழுவிப் பார்த்தேன்
இன்னும் இருக்குது அழுக்கு.

அம்மன் கோயில் ஓடி
ஐயரின் கையுக்குள் ஐம்பதை மடக்கி
அர்ச்சனை செய்துகொண்டேன்.
அவன் சமஸ்கிருதத்தில் - என்
பாவங்களைக் கழுவிக் கொண்டான்

அம்மாவணச் சொல்லுறன்
உண்மையத்தான் சொல்லுறன்
இன்னும் ஏறுது அழுக்கு
அது நானே ஏற்றிய அழுக்கு.

—சித்தன்—

○

ஃபா
பிரான்ஸ்

*உங்களுடைய தலித் சமூக மேம்பாட்டு அமைப்பினூடாக உங்களால் எதையும் சாதிக்க முடியாது என்று சொல்கிறார்களே! இது பற்றிய உங்கள் கருத்து என்ன?*

வரவேண்டிய சந்தேகம்தான். ஏனென்றால் வரலாற்றில் எப்போது ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி போராட முனைகிறார்களோ அப்போதெல்லாம் அவர்களை முடக்குவதற்கு பல தந்திரங்களைக் கையாண்டிருக்கிறது. இந்த மேல்சாதியவர்க்கம், இணையத்தள ஊடகங்களில் எம்மீது சேறு பூசுபவர்களின் கடந்தகாலங்களை எடுத்துப்பாருங்கள். அவர்கள் அத்தனைபேருமே அன்றைய பல அராஜகங்களுக்குத் துணை போனவர்களும், ஆதிக்கசாதியினரும்தான். ஏதோவொரு காரணம் கொண்டு இப்படி மூர்க்கமாக எதிர்ப்பவர்கள் அந்த எதிர்ப்பதற்குரிய அவர்களது பிரதான காரணத்தினை எமது மாநாட்டிற்கு முன்னரேயே ஏன் கண்டுகொள்ளாமல் விட்டார்கள். அப்போது மட்டும் அதனை எதிர்த்து ஏன் இவர்கள் எதுவும் செய்யவில்லை. எமது மாநாட்டின் பின்னரான இவர்களது எதிர்ப்பு ஏதோவொரு காரணம் கொண்டு எம்மீது சேறு பூச முயன்றாலும் அது நிச்சயமாக தலித் மக்களின் மீதான இவர்களது மேலாதிக்கத்தினை, ஏளனத்தினை, எம் சமூகவிடுதலையை விரும்பாமையை, அதன் தார்மீகத்தினை உணராமையைத்தான் உணர்த்தி நிற்கிறார்கள். எனவே உங்களது கேள்வி புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றுதான். ஆனால் வரலாறு எப்போதும் முன்னோக்கித்தான் செல்லும். இறுதியில் மக்கள் வெல்வர். மக்கள் என்பது எல்லாவகையிலும் ஒடுக்கப்பட்டவர்களை குறிக்கும் சொல்.


எம்மாநாடானது எமக்கு பலவிதமான அனுபவங்களைத் தந்திருக்கிறது. இதில் தோழமை உள்ளவர்கள் யார், எதிரிகள் யார் என்பதை எமக்கு உணர்த்தியதோடு இதுவரைகாலமும் எம்மோடு சேர்ந்து வேஷம் போட்டு நடித்தவர்களின் முகமூடிகளைக் கிழித்தெறிந்து அவர்களது உண்மை முகங்களைக் காட்டியிருக்கிறது. தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரது வளர்ச்சிதான் இத்தனை விமர்சனங்களுக்கும், சேறுபூசல்களுக்கும் காரணமாயிருந்தபோதும், சரியான விமர்சனங்களே எங்களை மேலும் வளர்த்தெடுக்கும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம்.

## கேள்விக் கணைகள்

○



படிப்பகம்







இலவம் பஞ்சிலும்
இலேசான உன் - இதயம்
அமைதியாய் நகர்ந்து
ஆயிரம் கதை சொல்லி
மௌனமாய் போனதே...

**பராமாஸ்ரர்** உடனான இறுதிச் சந்திப்பாக பிரான்ஸ் தலித் மாநாடு அமையப்போகின்றது என எங்களில் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. மாநாட்டை ஒட்டி "தீண்டாமைக்கு எதிரான போராட்ட நினைவுகள்" பற்றி மாநாட்டில் பேச பொருத்தமானவராக நாம் அணுகியபோது தனது தேக ஆரோக்கியத்தையும் பொருட்படுத்தாது உடனடியாகவே அதுக்கு சம்மதித்திருந்தார். மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றத் தொடங்குகையில் "இந்த முதலாவது தலித் மாநாட்டில் முதலாவது அமர்வில் எனக்கு பேசும் வாய்ப்பளித்தமையை பெரும் கௌரவமாகக் கருதுகிறேன்" என அவர் அடைந்த புளகாங்கிதம் இன்றும் எம் கண்முன்னால். அந்த மகிழ்ச்சியை அவர் வாழும்போதே ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓயாது குரல்கொடுத்து வந்த அந்த மனிதனுக்கு வழங்கியதில் நாம் பெருமையடைகிறோம்.

கம்யுனிச சித்தாந்தங்களின் ஈடுபாட்டுடன் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த பரா மாஸ்ரர் அவர்கள் தனது சிந்தனையில் மட்டுமன்றி வாழ்நாள் முழுக்க அவற்றை சித்தமாகவே கொண்டியங்கியவர். வர்க்கத் தற்கொலையை மட்டும் அல்ல தான் சார்ந்த சாதியையும் பிரதேசத்தையும், இனத்தையும் கூட தற்கொலை செய்துகொள்ளும் தைரியம் வாய்த்தால் மட்டுமே மனிதனாக வாழமுடியும் என்பதை தனது சொந்த குடும்ப வாழ்வில் நிருபித்துக் காட்டியவர் அவர். புகலிட வாழ்வில் கருக்கொண்ட மாற்று அரசியல், மாற்று இலக்கியம், மாற்று சிந்தனைகள் என்பவற்றின் முன்னோடிகளில் ஒருவரான பரா மாஸ்ரர் அவர்கள் இலக்கியச் சந்திப்பின் வளர்ச்சிக்காக ஓயாது உழைத்து வந்தவர்.

"சிந்தனை" சஞ்சிகையின் ஆசிரியராக அவரது பணி புகலிட மாற்றுக்கருத்தாளர்களில் பலருக்கு அவரை ஒரு ஆதர்ச புருஷராக முன்நிறுத்தியது. தமிழ் தேசியவாதத்தின் பெயரில் முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்டு வரும் வன்முறைகளை இலக்கியச்சந்திப்பு விவாதத் தளங்களில் பகிரங்கமாகக் கண்டிக்க அவர் ஒருபோதும் பின்நின்றதில்லை. மனித உரிமைகள் குறித்து அவர் கொண்டிருந்த பார்வை விசாலமானது. ஆயுத வன்முறைகளும், படுகொலைகளும் மட்டும் அல்ல தோட்டப்பகுதிவாழ் மலையக மக்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வாழ்வு என்பதும் கூட மனித உரிமைகள் சார் கேள்விகளுக்கு உட்பட்டதே என்று உரத்துப் பேசிவந்த ஒரு மனிதன் தன் வாழ்வை முடித்துக்கொண்டுள்ளான்.

சாதியத்தின் பெயரிலான தீண்டாமைகளுக்கும், முஸ்லிம்கள் மீதான ஒடுக்கு முறைகளுக்கும் அடிப்படைக்காரணமாக அமைவது யாழ் மேட்டுக்குடி அரசியல் கட்டிவளர்த்த மையவாதப் போக்கே என்பதை சரியாக அடையாளம் கண்டு அதற்கெதிராக சகல தளங்களிலும் போராடி வந்தவர் அவர். அதனை நடந்து முடிந்த தலித் மாநாட்டின் உரையிலும் மிகதெளிவாகவும், பகிரங்கமாகவும் தெரிவித்திருந்தார்.

தனது குடும்ப உறவுகள் ஒவ்வொருவரையும் சமூக விடுதலை சார்ந்த பிரக்ஞை உள்ள மனிதர்களாக வளர்த்தெடுப்பதென்கின்ற (உலகப்பெரும் புரட்சிக்காரர்களாலேயே முடியாத) சாதனையை தனது சொந்தவாழ்வில் அவர் சாதித்திருக்கின்றார். இவரது இழப்பு மனிதகுல விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் பேரிழப்பேயாகும்.

**- தலித் சமூக மேம்பாட்டு முன்னணி - பிரான்ஸ்-**

www.padippakam.com

# நாற்சந்தி நயினாருக்கு....

கனடாவிலிருந்து வெளிவரும் 'ஈழமுரசு' எனும் பத்திரிகையில் நாற் சந்தி நயினார் எனும் பத்தி எழுதப்பட்டு வருகிறது. 2007 நவம்பர் மாத கனடா ஈழமுரசின் நாற் சந்தி நயினார் பத்தியில் "...சாதிகள் இல்லையெண்டு அடிச்சுச் சொன்னாலும் சாதிச் சங்கம் வைப்போம் எண்டு தண்டமெடுத்து நிக்குதுகள் சிலது...." என்று எழுதப்பட்ட கருத்துக்கு, எமது கனடா வாசகர் ஈழவன் அவர்களின் சில மறுப்புக் குறிப்புகள்.

நாற் சந்தி நயினார் அவர்களுக்கு நவம்பர் 07-14 2007 இன் கனடா ஈழமுரசு பத்திரிகையில் 'சாதிச் சங்கம் வைச்சும்...' எனும் தலைப்பில் எழுதப்பட்ட சில விடையத்தைக் குறித்து சில வினாக்கள் உங்களிடம் கேட்கிறேன்.

1 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாரதியார் எண்டைக்கோ பாடிவிட்டார் என்பது உண்மைதான். அவருக்கு முன்னரே ஔவையும் பாடியுள்ளார். ஆனால் தமிழ் நாட்டில் சாதிக் கொடுமைகள் ஒழிந்ததா? பாடசாலையில் ஒரு பிள்ளையினை சேர்ப்பதற்கே அங்கு பிள்ளையின் சாதி என்ன வென்று பதிவு செய்யும் நிலை இன்றும் உண்டு.

2 ஜாதிக் கட்சிகளான வன்னியர் சங்கம் (பாட்டாளி மக்கள் கட்சி) விடுதலைச் சிறுத்தைகள் -திருமாவளவன், டாக்டர் கிருஸ்ணசாமியின் புதிய தமிழகம் ஆகியன எல்லாம் இன்றும் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக போராடுகின்றன. இக்கட்சிகளே விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் என்பதை தாங்கள் அறியீரோ?

3 ஈழத் தமிழர்களிடம் காணப்படும் ஜாதி அடக்குமுறைகளை, அடாவடித்தனங்களை இன்றும் உங்கள் அபிமானப் பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் வாரம் தோறும் மணமக்கள் தேவை என்ற விளம்பரங்களில் மணமக்களின் தகுதிகளில் முதல் தகுதியாக சாதியமே முன்மொழியப் படுவதை நீர் அறியீரோ? இதற்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் சாதியம் அற்ற சமத்துவ சமுதாயம் மலர வேண்டும் பாகுபாடுகள் ஒழியவேண்டும் எனக் கேட்பவர்கள் எப்படி யா புலிகளின் எதிர்ப்பாளர்களாக முடியும்.

நான் ஜாதி சங்கங்களையோ, கட்சிகளையோ ஆதரிக்கவில்லை. அவை தோன்றாதிருக்க இதய சுத்தியுடன் எல்லோரும் சகல அடக்குமுறை, ஒடுக்குமுறை, பாகுபாட்டினை நீக்க முன்வரவேண்டும்

சாதிகள் இல்லை என்று எழுதும் நீரே இறுதியில் "அது சரி பார்ப்பானுக்கு தட்சணை கொடுத்தால் உலக்கைக்கும் தட்சணை செய்வான்" என்று ஒரு குறிப்பிட்ட சாதியினைக் கூறிக் கிண்டல் செய்துள்ளீரே!!! இது நியாயமா? இதுதான் சாதிகள் இன்றில்லை என்று வேதம் ஓதும் சாத்தானா நீர்?

அன்புடன்
**ஈழவன்** (கனடா)

பஞ்சமர்கள் என அழைக்கப்பட்ட சமுகத்தினர் சிலரிடம் இயல்பாகவே ஒரு தாழ்வுச் சிக்கல் அடி நெஞ்சில் குடிகொண்டுள்ளது. ஊருக்குள் இருமரவும் தூய சனாதன வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்லிக்கொள்பவர்களுடன் தாங்களாகவே வலிய ஒட்டிக்கொள்வார்கள். தங்களையும் அவர்களுடைய செயல்களில் இணைத்துப் பிணைத்துக்கொண்டு தொண்டூழியம் பார்ப்பதில் முன்நின்று உழைப்பார்கள். மாடாய்ப் பாடுபடுவார்கள். இதனால் இவர்களுக்கு மிகப்பெரிய திருப்தி. அந்த பெரிய மனிதர்களின் நிழலில் சீவிப்பதே தமது பிறவிப் பெரும் பயன் என்ற எண்ணம்.



**டொமினிக்ஜீவா** "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்"



படிப்பகம்

www.padippakam.com

## நினைவுக்குறிப்புகள்—04 — தோழர் யோகரெட்ணம்

# தீண்டாமைக் கொடூரங்களும் தீ மூண்ட நாட்களும்

பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சு.கட்சி ஆட்சிபீடம் வந்தது. பல தேசியமய கொள்கையை நடைமுறை படுத்தியது. வங்கிகள், பெற்றோலியம், இன்ஸ்சூரன்ஸ், திருமலைத் துறைமுகம், மற்றும் பாடசாலைகள். இச்சட்டம் பலதரப்பட்ட இலங்கை வாழ்மக்களுக்கு நன்மை அளித்த போதும் தமிழ் தலைமைகள் சட்டத்தை வன்மையாக எதிர்த்தனர். குறிப்பாக பாடசாலைகள் தேசியமயம் என்பதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர்களின் கபட உள்நோக்கத்தில் தலித் சமூகம் கல்வி மூலம் மேம்பட்டுவிடக் கூடாது என்கின்ற ஆதங்கம் அடிப்படையிருந்தது. தம் யாழ் மேலாதிக்கத்திற்கு பெரும் இடைஞ்சலாகிவிடும் என்பதே அது. முன்னர் வசதியானவர்கள் காசு கட்டித்தான் பாடசாலைகளில் சேரமுடியும். தேசியமயத்தின் பின் அன்னிலை மாறிவிட்டது. குடாநாட்டில் சி.த.மகா.(சிறுபான்மை தமிழர் மகாசபை) சபையின் 15 பாடசாலைகளில் 200 தலித் ஆசிரிய ஆசிரியைகளை யாழ் மேலாதிக்க தமிழ் தலைமைகள் மனப்பூர்வமாக ஏற்பார்களா?

பாடசாலைகள் தேசியமய சட்டம் பாராளுமன்றில் நிறைவேறியது. அன்றைய கல்வி அமைச்சர் W.தகாநாயக்கா அவர்களின் பெரிய மனதினால் சி.த.மகாசபையின் வேண்டுதலால் தலித் சமூகத்தின் 15 பாடசாலைகளும் 250 பேர்வரையான ஆசிரிய ஆசிரியைகளும் அரசு உடமை ஆக்கப்பட்டது. அரச உத்தியோகஸ்தர்கள் என்ற அந்தஸ்ததை ஆசிரியர்கள் பெற்றுக்கொண்டார்கள். வட, சண்டிலிப்பாய் பாடசாலை (அ.த.பாடசாலை) யை அரசு பொறுப்பு எடுக்க நடவடிக்கை எடுக்கின்றது. கல்வி அதிகாரிகள் பாடசாலையை பார்வையிட வருவதாக தகவல். இங்குதான் கந்தையா மாஸ்ரரின் புத்தி கூர்மையை பார்க்க வேண்டும். ஐந்து பாடசாலைகளை உள்ளடக்கிய கிராமம், அனைத்து பாடசாலைகளும் மிகவும் அருகில், மாணவர்கள் தொகை இப்படி பல சிக்கல்கள். கல்வி அதிகாரியை அழைத்துவர குறிப்பிட்ட திகதி மாகியீயப்பிட்டி சந்தியில் கந்தையா மாஸ்ரர் காத்துநின்று கல்வி அதிகாரியின் காரை எதிர்பார்த்து நிற்கிறார். குறித்த நேரம் அதிகாரி வந்து சேருகிறார். புதிய இடம் என்பதால் அதிகாரிக்கு வழிகாட்ட வேண்டும் அல்லவா? சரி கார் மாசியப்பட்டி உள் ஒழுங்கை வழியாக கொட்டுபனை சுடலை வழியாக கொம்பனி துண்டு, கொட்டடி வண்டில் பாதைவழியாக பாடசாலைக்கு அழைத்து வரப்படுகிறார். அப்பாதைகளில் காரில் வரும்போது செம்மண் புழுதி அதிகாரிக்கு சீயெனப்பட்டது. (சண்டிலிப்பாய் வடக்கு அப்போது பனையும் சிறுவடலிகளும் கடுகநாவலும், கள்ளிச்செடிகளும், முட்களும் நிறைந்த வரண்ட சன நடமாட்டம் குறைந்த மிக மிக பின்தங்கிய ஒரு பகுதி.) ஒருவாறு பள்ளிக்கூடம் வந்தாச்சு. பாடசாலை நிலத்தின் தொகை 10 பரப்பு. மாணவர் வரவு பாடசாலை நிறைந்துள்ளது. வகுப்புக்கள் அனைத்தையும் பார்வை செய்கிறார். மாணவர் வரவுக்குறிப்பு மிகவும் கவனமாக கவனிக்கிறார்.

கந்தையா மாஸ்ரர் அருகில் இருக்கிறார். கல்வி அதிகாரி சிபார்சு செய்ய முன் கேட்டாராம் 'கந்தையா எனக்கு நீர் ஒரு உதவி செய்ய வேண்டும்." என்றாராம். திரு.கந்தையா அவர்கள் அதிகாரியின் முகத்தை நிமிர்ந்து பார்த்த போது ஒன்றுமில்லை கந்தையா எனது மருமகன் வேலையில்லாமல் இருக்கின்றான்...... என்று இழுத்தாராம். அத்துடன் நீங்கள் சம்மதித்தால் சரி என்றாராம். அதன் பயனாக அப்பாடசாலையில் உயர்சாதிக்காரன் ஆசிரியர் பதவி பெற்றார். அவரின் பெயர் கதிர்காமத்தம்பி. மிகவும் அழகன். பெருமையோ, சாதியோ அறியாத மனிதன். இப்பாடசாலைக்கு நான் எனது 3வது வகுப்புக்கு இரத்தினம் மாஸ்ரரின் சார்பா அவரின் சயிக்கிளில் சென்று வந்தேன். இப்பாடசாலை எனது வீட்டிலிருந்து 3/4 கிலோமீற்றர் தூரம் வரும். இப்பாடசாலையின் ஆரம்பகால கல்வளை கேணிக்கட்டு பகுதியிலிருந்து முதல் சென்ற மாணவன் என்ற பெருமை எனக்கு உண்டு.

திரு.மு.சுந்தரமூர்த்தி, திரு.கிருஸ்ணன் இருவரையும் பற்றி இப்பகுதியில் கூற வேண்டும். இவ்விருவரும் இரட்டைக்குழல் துப்பாக்கி போல. முற்போக்கு சிந்தனையார்கள். சமூக நலனில் அக்கறை உடையவர்கள். பொதுவான விடயங்களில் இவர்களின் பங்கும் இரத்தினம் மாஸ்ரரின் பங்கும் கனதியானது. எமது சண்டிலிப்பாய் 3 ம் வட்டாரத்தை உள்ளடக்கிய மாணிப்பாய் கிராம சபையுடன் சேர்ந்தது. இதில் 13ம், 14ம், 15ம் வட்டாரம் என்பது சண்டிலிப்பாயில் 13 ம் வட்டாரம் தலித்மக்கள் 45% இருக்கிறார்கள். 14 ம் வட்டாரம் 60 முதல் 65% மான தலித் மக்கள் இருக்கிறார்கள். 15 ம் வட்டாரத்தில் திரு.மு.சுந்தரமூர்த்தி வேட்பு மனுவும் செய்துவிட்டார். திரு.மு.சுந்தரமூர்த்தி அவர்கள் அன்று தன் திறமையான முயற்சி மூலம் கடைச்சல் தொழிற்சாலையின் அதிபராக 10 அல்லது 15 தொழிலாளர்களை (அனைவரும் தலித்துகள்) வைத்து தொழில் செய்து வந்தார். பின் நாளில் அவர் மிகவும் சிறந்த தொழில் அதிபராக இருந்து வந்தார். பின்னர் காலத்தின் சுழற்சி, அவரும் புலம் பெயர்ந்து லண்டன் வாசியானார். முதல் முறையாக 14 ம் வட்டாரத்தின் வட்டார அங்கத்தவராக போட்டியின்றி தெரிவானார். பின்னர் நடந்த இரண்டு தேர்தல்களில் போட்டி ஏற்பட்டது. அவர் துணிவுடன் போட்டியில் நின்றார். எதிர்த்து நின்றவர்களை தோல்வியடைய



படிப்பகம்

www.padippakam.com

வைத்தார். அதுவும் 100 க்கு மேற்பட்ட வாக்குகளால். மானிப்பாய் கிராமசபை சரித்திரத்தில் தலித் ஒருவர் உப.தலைவர் ஆன பின்னர் திரு.சுந்தரமூர்த்தி அவர்களின் சமூகப்பணி காரணமாக அரசு அவரை சமாதான நீதிபதியாக நியமித்தது. சண்டிலிப்பாயின் முதல் தலித் சமூக சமாதான நீதிபதி என்ற பெருமையும் அவரையே சாரும்.

## சமாதான நீதிவான்

சமாதான நீதிபதி பதவி ஒரு சமூக சேவையாளனை கௌரவப்படுத்தும் அம்மனிதனின் சமூகப்பணி மேலும் முன்னெடுக்கவும், அரசினால் வழங்கப்படும் கௌரவ பதவியாகும். இப்பதவிக்கு முன்னர் உடையார், முதலியார் என்ற பதவிகள் இருந்தன. இவை யாவும் தமிழ் சமூகத்தை பொறுத்தவரை அது உயர் சாதிக்காரருக்கே உரிய ஒன்றாகியது. காரணம் அன்று அரசு உயர் பதவிகளில் யாழ்ப்பாண கல்விமான்களில் "சாதிமான்களின;" ஆட்சியே கோலோச்சியது. பண்டார நாயக்கா அவர்கள் "சிங்களம்" மட்டும் சட்டத்தை நிறைவேற்றி சிங்கள மக்களை விழிப்படைய செய்த பின்னர்தான் மெல்ல மெல்ல மாற்றங்கள் வந்தன. இந்த மாற்றங்களின் காரணமாக தலித் சமூகம் பலவகையான நன்மைகளை பெறவும் முடிந்தது.

முன்னர் ஒரு தலித் தன் பிள்ளைக்கு பிறப்பு பத்திரம் பதிய ஒரு பதிவுகாரனிடம் செல்லும் போது (சங்கடபடலையில்) அவரின் முன் கேற்றில் சிறிய கொட்டகை அதிலிருந்ததான், தான் வந்த விடயத்தை கூனிக்குறுகி சால்வையை கக்கத்தில் வைத்து நயினார்/நாச்சியார் போட்டு, ஒரு தரம் போல இருமுறை அலைந்து சில இடங்களில் பதிவு கரனின் வீட்டு வேலைகளை செய்து அவரை தாஸ்ஜா செய்துதான் காரியத்தை ஒருவாறு நிறைவுக்கு கொண்டு வந்தாலும், பதிவில் பதிவுகாரன் விரும்பிய பெயரே வைத்து ஆண்/பெண் மாறியும் பதிந்து விடுவது வழமை. பின்னர் ஒரு சமாதான நீதிபதியிடம் நற்சான்றிதழ், சத்தியக்கடதாசி தேவையானபோது பெறுவதற்கு அலைந்து திரியவேண்டும். இப்போது சமாதான நீதிபதிகள் வீட்டுக்கு வீடாக இருக்கிறார்கள். 1970 ஆம் ஆண்டுக்கு முன் ஒரு கிராமத்துக்கு ஒருவர், சில கிராமத்துக்கு அதுவும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் விசுவாசி கேற் முதலியார் இராஜேந்திரா அன்று ஒரு செனட்டர். இவர் தலித் சமூகத்தை சார்ந்தவரே, இருந்தும் இவர் தன் வாழ்நாள் பூராகவும் கொழும்பு வாசியாக இருந்துவிட்டார். தோழர் எம்.சி.சுப்பிரமணியமும் அவர் தலைமையிலான சிறுபான்மை தமிழர் மகாசபையுமே தலித் சமூகத்தின் அடிப்படை பிரச்சனைகளை தேவைகளை அரசுகளிடம் தெளிவு படுத்தி வந்ததுடன் யாழ்ப்பாண சாதிவெறிக்கு எதிரான செயல்பாடுகளில் நீண்டகாலமாக குரல் கொடுத்ததும் அவர்களே! முன்பு ஒரு தலித் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் நற்சான்றிதழ் சத்தியக்கடதாசி பெற வேண்டும் என்றால் அந்த உயர்சாதி சமாதான நிதிவானை சந்திக்க பலதடவை தலைதெறிக்க வெய்யிலில் அலைந்து அல்லது பிறரின் உதவியுடன் தான் காரியம் பார்க்கமுடியும். அந்த குறையை, அம்மக்களின் துயரை மூர்த்தியண்ணன் மூலம் தீர்க்க முடிந்தது என்பது எமக்கு பெருமைதான் மெல்ல மெல்ல மாற்றங்கள் தொடரலாகியது. படித்த சில தலித் இளைஞர்கள் மூர்த்தியண்ணரின் கடைச்சல் தொழில்சாலை, கராஜ் வேலையில் இணைந்தனர். சிலர் தச்சு தொழில் பயின்றனர். வெல்டிங், ரிங்கர், பெயினரர் என தொழில் பயின்றனர். இவர்களில் முன்னோடி சுப்பிரமணியம் (கனகன்), சுந்தமூர்த்தி, செல்லையா (இலங்கன்) குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் தொழிலுடன் அரசியலிலும் புகழ் பெற்றவர் சுந்தரமூர்த்தி அவர்களே.

திரு.கிருஸ்ணன் (மணிமாமா) அவர்கள் கைத்தொழில் எதுவும் சற்றுக்கொள்ளாதவர். அரசியல் சமூக பணிதான் வேலையாக (சம்பளமில்லாத வேலை என்பார்கள்) கொண்டிருந்தார். திரு.சுந்தரமூர்த்தி அவர்களின் அரசியல் சமூக ஈடுபாட்டிற்கு பக்கத்துணையாக இருந்து செயல்பட்டவர். இவரின் சிந்தனை சாதிக்கொடுமையை எதிர்ப்பதில் அல்லது வீழ்த்துவதில் இருக்கும். சீரணி நாகபூசனி அம்மனின் புதிய தேர் வெள்ளோட்டம். மணிமாமா சிலருடன் வேள்ளோட்டம் பார்க்க செல்கிறார். தேர் மிண்டி(தேர்தரிப்பு)யடியில் ஒருவர் சிறிய புத்தகம் ஒன்றை அங்கு வைத்து குறிப்பிடவர்களிடம் கொடுக்கிறார். மணிமாமா தலித் ஒருவரை அனுப்பி புத்தகம் கேட்கிறார். அப்புத்தகத்தை வழங்கும் சோமசேகரம் மாஸ்ரர் அத்தலித் சகோதரரிடம் உயங்களுக்கு இது தரமாட்டன்




திரு.சுந்தரமூர்த்தி அவர்களுக்கு அவருடைய சேவையை பாராட்டி பாரிசில் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் எடுக்கப்பட்ட

என்றாராம். புத்தகத்துக்கு போய் திரும்பி வெறும்கையுடன் வந்தவரை பார்த்த மணிமாமா தான் புத்தகம் வாங்க செல்கிறார். மாஸ்ரரிடம் கேட்டபடி நிற்கிறார். மேசையில் "தீண்டாமை" என்ற பெயரில் றோஸ்கலரில் மட்டையுடன் சிறிய சிறிய புத்தகத்தை காண்கிறார். அவ்வளவு புத்தகத்தையும் அள்ளிக்கொண்டு வந்துவிட்டார். மாஸ்ரர் செய்வதறியாது திகைத்துவிட்டார். அப்புத்தகம் 104 பக்கங்கள் மாத்திரம் கொண்டது. பின்னாளில் நான் அப்புத்தகத்தை படித்ததுடன், வீட்டிலும் வைத்திருந்தேன். இதுபோல பல ஆண்டுகளின் பின் புணர்நிர்மானம் செய்து 1974 ஆண்டு கொடியேற்றம் கண்ட கல்வளை பிள்ளையார் கோயிலிலும் மணிமாமா உரிமைக்கான குரலாக ஒலித்ததுடன் "உலகம் அறியாத புதுமை" என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்றும் வெளியிட்டார். அது மட்டுமல்ல 14 ம் வட்டாரத்தில் இறுதியாக நடந்த தேர்தலின் போது சிலரின் தூண்டுதலால் சுந்தரமூர்த்திக்கு எதிராக திரு.நா.கந்தையா (ஒரே சமூகம்) போட்டியிட்ட போது மணிமாமா எழுதிய ஒரு பிரசுரம் நினைவில் இன்றும் உண்டு. அதன் தலைப்பு "சிந்தியுங்கள்! தீர்ப்பளியுங்கள்!! வாக்களியுங்கள்!!!" 14 ம் வட்டார கல்வளை றோட்டில் வசிக்கும் வி.இராமன் (எனது தந்தை) என்பவரால் வெளியிடப்பட்டது. காலப்போக்கில் மணிமாமா திரு.சுந்தரமூர்த்தி அவர்கள் இடதுசாரிகள் என்ற நிலையிலிருந்து ஏனோ தடம்மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடரும்......



படிப்பகம்

www.padippakam.com

அன்பான வாசகர்களுக்கு!

தொடர்ச்சியாக ஏழு பத்திரிகைகளைக் கொண்டுவந்துள்ளோம். மேலும் செழுமைப்படுத்தி தொடர்ச்சியாக வெளிவருவதற்கு வாசகர்களாகிய உங்களது பங்களிப்பு அவசியம் என கருதுகிறோம். இதைப் புரிந்துகொண்டு கீழ் தரப்படும் முகவரிக்கு உங்கள் சந்தாக்களை காசோலைகளாக அனுப்பி வைக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**F.D.S.D.S**
MR.THEVATHASAN
4,PLACE ROGER SALENGRO
95140 GARGES LES GONESSE
France

“ ஏடு ”

# 2 வது தலித் மாநாடு

## லண்டன்

16, 17 பெப்ரவரி -2008

தொடர்புகளுக்கு:

00 33 661 803 690
00 33 660 368 804
00 44 7793 794 362
00 44 7702 812 397



இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரால் 2007, ஒக்டோபர் 20, 21 பாரிசில் நடத்தப்பட்ட முதலாவது தலித் மாநாட்டின் தொடர்ச்சியாக இலங்கை தலித் மக்களின் எதிர்கால பொருளாதார, சமூக முன்னேற்றம் கருதிய வேலைத்திட்டங்களை உத்வேகப்படுத்தும் நோக்கில் இரண்டாவது தலித் மாநாடு 2008, பெப்ரவரி 16, 17 களில் லண்டனில் நடத்தப்படவுள்ளது.

மாநாட்டின் அமர்வுகளில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது இருக்கைக்கு முன்பதிவுகள் செய்துகொள்ள வேண்டும்.

இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் (பிரான்ஸ்) சார்பில் வெளிவரும் ஏடு.

படிப்பகம்